17 ஏப்ரல் 2022

Alleluia, the Lord is Risen!

# Newbec

NEW WAY OF BEING CHURCH

ஆண்டவரின் உயிர்ப்பின் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது



# சாத்தியமானவற்றில் நம்பிக்கைக் கொள்ளுங்கள்

இன்றைய நற்செய்தியில் இயேசுவின் சீடர்கள் கல்லறைக்கு அவரின் இறந்த உடலைக் காணச்செல்கிறார்கள். ஆனால் அங்கு அவர்கள் வெற்றுக்கல்லறையைத் தான் கண்டார்கள். அந்தநேரம் வரை இயேசு அவர்களிடம் என்ன சொல்ல முயற்சித்தார் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. அவர் உண்மையில் இறந்து உயிர்த்தெழப்போகிறார் என்ற உண்மை, வெற்றுக்கல்லறையைப் பார்த்தபோது தான் அவர்கள் புரிந்துகொண்டு நம்பினார்கள்.

வாக்களிக்கப்பட்ட மெசியாவாகிய இயேசு தான் இறந்து உயிர்த்தெழுந்தவர் என்று நம்புவது நமக்கு இப்போது எளிதாகத் தான் இருக்கும். ஆனால் அந்தக் காலத்தில் சீடர்களுக்கு இதை நம்புவதும் ஏற்றுக்கொள்வதும் மிகவும் கடினமாக இருந்திருக்கும்.

இன்றும் கூட நாம் அனைவரும், குறிப்பாக அதிகாரம் உள்ளவர்கள் ஏதேனும் கூறினால், அது உண்மையாகத் தான் இருக்கவேண்டும் என்று நினைக்கிறோம். இருந்தபோதும் அதிகாரிகளால் ஏளனம் செய்யப்பட்டபோதும், கூட்டத்தினரால் நிராகரிக்கப்பட்டபோதும் இயேசு தனித்து நின்றார். எசாயா புத்தகத்தில் இகழப்பட்டவராக, முக்கியத்துவம் இல்லாதவராக யாரே ஒருவர் போல தண்டிக்கப்பட்டார், தாக்கப்பட்டவராக, கடவுளால் தாழ்த்தப்பட்டவராகக் குறிப்பிடப்படுகிறார். இதுபோன்றதொரு கொடூரத்தை நேரில் கண்ட சீடர்களுக்கு உயிர்த்தெழுதல் பற்றிய இயேசுவின் வாக்குறுதியை தொடர்ந்து நம்புவதற்கு அளவுக்கதிகமான நம்பிக்கையும், துணிவும் தேவைப்பட்டிருக்கும்.

அதனால் தான் இறந்தவர்களிடையே அவரைப் பார்க்க நினைத்து கல்லறை வாசலில் நின்று இயேசுவைத் தேடினார்கள்; கடவுளைப் பற்றியும் தன்னைப் பற்றியும் இயேசு கூறியது அனைத்தும் உண்மை என்று நம்புவதற்கும் அவர் உயிருடன் இருக்கமுடியும் என்று நம்புவதற்கும் பயந்தார்கள்.

வெறுமையான கல்லறையின் காட்சியோடு நற்செய்திப் பகுதி அங்கு முடிவடைகிறது. மேலும் இறந்தவர்களிடையே அர்த்தமுள்ள வாழ்க்கையை நாம் தொடர்ந்து தேடுகின்றோமா அல்லது நம்மை நேசிக்கும், நம்மோடு வாழவிரும்பும், நம் பாவங்களுக்காக தன்னுயிரை விலையாகக் கொடுத்து, நம்மோடு எப்போதும் இருப்பேன் என்று வாக்குறுதி அளிக்கும் கடவுளை நம்புவதற்கு துணிகிறோமா? **இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க நாம் அழைக்கப்படுகிறோம்.**

இன்று இயேசு உயிர்த்தெழுந்தார் என்று சொல்வது எளிதாக இருக்கலாம். ஆனால் அவருடைய அன்பு மற்றும் வாக்குறுதியின் செய்தியை நம்புவது இன்னும் கடினமாக உள்ளது. நம்மைச் சுற்றியுள்ள உண்மையின் அவலத்தைப் பார்த்தபின்னும், கடவுளின் அன்பையும், வல்லமையையும் நம்புவதற்கு மிகப்பெரிய துணிவும், நம்பிக்கையும் நமக்குத் தேவை.

எனவே, தம் மகனை முதலில் நம்பியவரும் அவரோடு இறுதிவரை நின்றவருமான அன்னை மரியாவோடு இணைந்து, உயிர்த்தெழுதலின் வல்லமையை, வாழ்வில் தொடர்ந்து நம்பிடத் தேவையான அருளை மன்றாடுவோம்.

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

இதனால், அப்பெண்கள் அச்சமுற்றுத் தலைகுனிந்து நின்று கொண்டிருந்தனர். அவர்கள் அப்பெண்களைப் பார்த்து, “உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்?”

(லூக்கா 24:5)

**இன்றைய வாசகங்கள்:**

திப: 10: 34, 37-43;

திபா: 118: 1-2, 16-17, 22-23;

கொலேசையர்: 3:1-4 (அ) 1 கொரி: 5:6-8;

யோவான்: 20: 1-9 (அ) லூக்கா 24: 1-12.

INTERNAL CIRCULATION ONLY

BUL 16/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org